"மழைநீர் சேமிப்போம்" "பிளாஸ்டிக்கை தவிர்ப்போம் "

நகராட்சி அலுவலகம்,
தேனி - அல்லிநகரம் ,
நாள் : 26.11.2021.

## நகர்மன்ற அவசரக்கூட்ட அழைப்பிதழ்

நிகழும் திருவள்ளுவர் ஆண்டு 2051 பிலவ வருடம், கார்த்திகை மாதம் 10-ம் நாள் 26.11.2021-ம் தேதி வெள்ளிக் கிழமை மாலை 04.00 மணி அளவில் நகர்மன்ற அலுவலகத்தில் உள்ள கூட்ட மண்டபத்தில் நகர்மன்ற அவசரக்கூட்டம் நடைபெறும்

தனி அலுவலர் மற்றும் ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி

## பொருள் 01 :-

இந்நகராட்சிக்குட்பட்ட கர்னல் ஜான் பென்னிகுயிக் பேருந்து நிலையத்தில் புதிதாக நுண் உயிர் செயலாக்க மையம் ( Micro Compost Centre ) கட்டி முடிக்கப்பட்டு 06.10.2021 ஆம் தேதி முதல் நுண் உயிர் செயலாக்க பயன் பாட்டிற்கு பணிகள் நடைபெற்று வருகிறது. மேற்கண்ட நுண் உயிர் மையத்தில் மக்கும் குப்பைகளை பிரிப்பதற்கு பணியாளர்கள் தேவைப்படுகிறது. மேற்கண்ட ஆறு துப்புரவு பணியாளர்களை கொண்டு உரமாக்கும் பணிகளை மேற்கொள்ள வெளிக் கொணர்வு மூலம் ஏற்கனவே துப்புரவு பணியாளர்களை வழங்கி வரும் Pon Ramar Madurai , நிறுவனத்திடமிருந்து பணியாளர்கள் பெறுவதற்கு மன்றம் அனுமதிக்கலாம்.

மேற்படி தேவைப்படும் ஆறு பணியாளர்களுக்கு ஏற்கனவே, அனுமதிக்கப்பட்ட ஒப்பந்தப்புள்ளி தினக்கூலி விலை விகித்தின் படி பணியாளர்களுக்கு செலுத்த வேண்டிய Esi,Epf, Life Insurance ,Service tax, uniforms and Safety Equipments ஆகியவற்றை சேர்த்து மேற்படி பணிக்கு ஒரு மாதத்திற்கு உத்தேச செலவினம் ரூ.**85,000/–** ( ரூபாய் எண்பத்து ஐந்தாயிரம் மட்டும் ) மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

1. மன்றம் அனுமதிக்கலாம்.
2. மேற்கண்ட செலவினத்தினை நகராட்சி பொது நிதியிலிருந்து மேற்கொள்ளலாம்.
3. பொது சுகாதார பணியினை கருத்தில் கொண்டு அவசர அவசியம் கருதி தனி அலுவலரின் முன் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதையும் மன்றம் அங்கீகரிக்கலாம்.

ந.க.எண்: **2736 / 2019 /எச்1**

**தீர்மான எண் :** 2087
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

**பொருள் 02 :-**

நகராட்சி நிர்வாக தலைமை பொறியாளர், சென்னை அவர்களின் கடிதம்.ந.க.எண்29156/2019/D2. நாள். 17.09.2020 ன் படி, தேனி - அல்லிநகரம் நகராட்சிக்கு சொந்தமான வைகை அணையின் புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் இயக்கப்படும் சுத்திகரிப்பு நிலையம் நிலையங்கள், அரப்படித்தேவன்பட்டி, குன்னூர் மற்றும் NRT நகர் நீரேற்றுநிலையம் தனியார்வசம் ஒப்படைப்பு செய்து இயக்குதல் மற்றும் பராமரித்தல் பணியினை மேற்கொள்ள ஆண்டு ஒன்றுக்கு மதிப்பீடு. ரூ. 78.00 இலட்சத்திற்கு மூன்றாண்டுகளுக்கு அனுமதி வழங்கப்பட்டது.

அதன்படி, மேற்கண்ட பணிக்கு கடந்த 01.10.2020 ம் தேதியில் ஒப்பந்தப்புள்ளிகள் கோரியதில் குறைவான ஒப்பந்தப்புள்ளி தொகை **ரூ. 7651607.00 ற்கு** வழங்கிய திருமதி. டி. தவமணி என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஏற்று இந்நகர்மன்றம் தனது தீர்மான எண்.1553. நாள்.16.10.2020 ன் படி, மேற்கண்ட புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் இயக்கப்படும் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்றுநிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணியினை **01.11.2020 முதல் 31.10.2021 வரை** ஓராண்டிற்கு மேற்கொள்ள திருமதி. டி. தவமணி என்பவருக்கு பணி உத்திரவு வழங்கப்பட்டது.

தற்சமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். ந.க.எண்.21787/2021/EA2 யில் தெரிவித்துள்ளபடி O & M Outsoursing முறையில் நகராட்சிகளில் குடிநீர் பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு, பாதாளச்சாக்கடைத்திட்ட பராமரிப்பு மற்றும் பொது சுகாதாரம் பராமரிப்பு ஆகியவற்றினை புதிய நெறிமுறைகளை பின்பற்றி பராமரிப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தியதியன் பேரில் உரிய கருத்துரு தயார் செய்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களுக்கு அனுப்பப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசிய பணி பாதிக்கக்கூடாது என்பதனைக்கருத்தில் கொண்டும், மேற்கண்ட புதிய குடிநீர் அபிவிருத்தி திட்டத்தில் இயக்கப்படும் சுத்திகரிப்பு நிலையம் மற்றும் நீரேற்றுநிலையங்களை இயக்குதல் மற்றும் பராமரிப்பு பணி மேற்கொள்ளும் பணிக்கு 01.11.2021 முதல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் O & M Outsoursing முறையில் நகராட்சிகளில் பராமரிப்பு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கெனவே, பார்த்து வந்த திருமதி. டி. தவமணி ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**அலுவலககுறிப்பு:** அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) மேற்கண்ட செலவினத்தை குடிநீர் நிதியிலிருந்து மேற்கொள்ளவும் மன்றம் அனுமதிக்கலாம்.

இ) குடிநீர் தேவையின் அவசர அவசியம் கருதி மன்றத்தின் அனுமதியை எதிர் நோக்கி இந்நகர்மன்ற தனி அலுவலரின் அனுமதி பெற்று நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம் அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 650 / 2020 / இ2**

**தீர்மான எண் :** 2088
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

## பொருள் 03 :-

தேனி–அல்லிநகரம் நகராட்சியில் 33 வார்டுகளில் உள்ள பொதுமக்களுக்கு பழனிசெட்டிபட்டி குடிநீர் திட்டம், புதிய குடிநீர் திட்டத்தின் கீழ் உள்ள வைகை அணையில் எடுப்பு அணையிலிருந்து நீர் எடுத்து சுத்திகரிப்பு செய்து அங்கிருந்து NRT நகர் தரைமட்ட தொட்டிக்கு கொண்டு கொண்டுவரப்பட்டு அங்கிருந்து பம்பிங் செய்து நகரிலுள்ள 12 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளில் நிரப்பி குடிநீர் விநியோகம் செய்யப்பட்டு வருகிறது. தற்பொழுது இந்நகராட்சியில் குடிநீர் பிரிவில் குடிநீர் நிரந்தர பணியாட்கள் போதுமானதாக இல்லாத காரணத்தினால் பொது சுகாதார பிரிவில் உள்ள 3 துப்பரவு பணியாட்களை தற்காலிகமாக குடிநீர் பிரிவில் மாற்று பணி அடிப்படையில் பணிபுரிந்து வருகின்றனர் மேற்படி குடிநீர் திட்டத்தை பராமரிக்க கீழ்க்கண்ட பணியாட்கள் தேவைப்படுகின்றனர்.

| வ.எண் | இடம் | தேவையான வால்வு திறக்கும் பணியாளர்கள் |
|---|---|---|
| 1. | 12 மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டிகள் | 13 |
| 2. | வீரப்ப அய்யனார் கோவில் குடிநீர் திட்டம்((பம்ப் ரூம்) | 2 |
| 3. | வீரப்ப அய்யனார் கோவில் குடிநீர் திட்டம் (தரைமட்ட தொட்டி) | 1 |
| 4. | பழனிசெட்டிபட்டி (பம்ப் ரூம்) | 2 |
| மொத்தம் | | 18 |

எனவே 12 மேல்நிலை நீர்த்தேக்க தொட்டி மற்றும் வீரப்ப அய்யனார் கோவில் குடிநீர் திட்டம், மற்றும் பழனிசெட்டிபட்டி பம்ப் ரூம் ஆகிய இடங்களுக்கு தேவையான 18 பணியாட்கள் விநியோகம் செய்யவும் அதற்கு செப்டம்பர்,அக்டோபர்,நவம்பர்–2021 ஆகிய மூன்று மாத காலத்திற்கு மதிப்பீட்டுத்

தொகை ரூ.9.60 இலட்சம் மதிப்பீட்டில் இந்கர்மன்ற தீர்மான எண். 1949. நாள்.31.08.221 ன் படி மன்ற ஒப்புதல் பெற்று, இந்கர்மன்ற தனது தீர்மன எண். 1991. நாள் 20.09.2021 ன் படி இந்நகராட்சி ஒப்பந்ததாரர் திருமதி. டி. தவமணி மூலம் மேற்கொள்ளப்பட்டு வந்தது. மேற்கண்ட பணியாளர் சப்ளை பணியானது நவம்பர்– 2021 ம் மாதத்துடன் முடியவடைய உள்ளது.

தற்சமயம் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் சுற்றறிக்கை எண். ந.க.எண்.21787/2021/EA2 யில் தெரிவித்துள்ளபடி O & M Outsoursing முறையில் நகராட்சிகளில் குடிநீர் பராமரிப்பு, தெருவிளக்கு பராமரிப்பு, பாதாளச்சாக்கடைத்திட்ட பராமரிப்பு மற்றும் பொது சுகாதாரம் பராமரிப்பு ஆகியவற்றினை புதிய நெறிமுறைகளை பின்பற்றி பராமரிப்பு பணி மேற்கொள்ள அறிவுறுத்தியதியன் பேரில் உரிய கருத்துரு தயார் செய்து சென்னை, நகராட்சி நிர்வாக இயக்குநர், அவர்களுக்கு அனுப்பப்பட்டு அதற்கான நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

பொதுமக்களின் குடிநீர் அத்தியாவசிய பணி பாதிக்கக்கூடாது என்பதனைக்கருத்தில் கொண்டும், மேற்கண்ட வால்வு ஆப்ரேட்டர் 18 பணியாட்கள் சப்ளை செய்யும் பணிக்கு 01.11.2021 முதல் நகராட்சி நிர்வாக இயக்குநர், சென்னை அவர்களின் O & M Outsoursing முறையில் நகராட்சிகளில் பராமரிப்பு பணி மேற்கொள்ள நிர்வாக அனுமதி பெற்று புதிய ஒப்பந்தப்புள்ளி கோரி, பணி உத்திரவு வழங்கும் வரை ஏற்கெனவே, பார்த்து வந்த திருமதி. டி. தவமணி ஒப்பந்ததாரர் மூலம் அதே ஒப்பந்தப்புள்ளி விகிதத்தில் பணி மேற்கொள்ள மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

<u>அலுவலக குறிப்பு:</u>

அ) மன்றம் அனுமதிக்கலாம்.

ஆ) நகராட்சி குடிநீர் நிதியிலிருந்து வழங்க மன்றம் அனுமதிக்கலாம்.

இ) மேற்கண்ட சப்ளை பணியின் அவசியம் கருதி மன்ற முன் அனுமதி எதிர் நோக்கி நடவடிக்கை மேற்கொண்டதை மன்றம்

அங்கீகரிக்கலாம்.

**ந.க.எண். 2426 / 2021 / இ2**

**தீர்மான எண் :** 2089
**தீர்மானம்** : அலுவலகக்குறிப்பு அனுமதிக்கப்பட்டது.

தனி அலுவலர் (மற்றும்)
ஆணையாளர்
தேனி - அல்லிநகரம் நகராட்சி